1973 நவம்பர் 22]

மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்கிற விவரங்களை எல்லாம் தினத் தந்தியில் விளம்பரம் செய்துதான் தெரிந்துகொள்ள வேண்டுமா? இதற்கு அமைச்சரவை தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாங்கள் எல்லாக் கல்லூரிகளையும்தான் அதுபோன்ற விவரங்களைத் தரும்படி கேட்கிறோம். அவர்களும் தருகிறார்கள். அரசு குறிப்பிட்ட விகிதாசார அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும், ஊழல் எதுவும் இல்லை என்றே தெரிவிக்கிறார்கள். இருந்தும் எங்காவது முறைகேடு இருக்கிறது என்றால் அதுபற்றிய விவரங்கள் கொடுத்தால்தான் அவர்கள் கொடுத்துள்ள விவரங்களோடு ஒப்பிட்டு, குறைபாடு இருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டறிய முடியும். அவர்கள் கொடுக்கிற விவரங்களை வைத்தே நாம் பார்க்கிறபோது எல்லாம் சொட்டமனகத்தான் இருக்கும். தவறுகள் இருக்கின்றன என்பதற்கான குறிப்புகள் கிடைக்கிறபோதுதான் அதன்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வாய்ப்பு உண்டு.

Cotton cultivation by Textile Corporation.

* 313 Q. THIRU N. DENNIS
THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Textile Corporation of this State has undertaken any special scheme for the promotion of cotton cultivation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற பஞ்சில் 200 கவுன்ட்ஸ் வரையிலும் நூல் உற்பத்தி ஆகிறது. ஆகவே, அந்த மாதிரி நம் நாட்டு பருத்தியிலேயே 200 கவுன்ட்ஸ் கொண்டு வருவதற்கான ஆராய்ச்சி செய்யக்கூடிய முறையிலே சர்க்கார் ஆராய்ச்சிக் குழுவிற்கு அறிவுரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேளாண்மைத் துறையிலே கேட்க வேண்டும்.

நூல் விநியோகம்

*** 314 வினா—திரு. கி. ஜெயராமன்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் பருத்தி நூல் கொள்முதலையும் விநியோகத்தையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளுகின்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) நியாய விலைகளில் நூல் விநியோகிப்பதை ஒழுங்குபடுத்த 1948-ம் ஆண்டு பருத்தி துணி நூல் கட்டுப்பாடு ஆணையின்கீழ் இந்த மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கும்படி 1972-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. மத்திய அரசின் ஆணைகள் இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எ. க. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பதிலிலிருந்து ஓராண்டு காலமாகியும் அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லையென்று தெரிகிறது. நூல் விலை ஏராளமாக ஏறியிருப்பதால், நெசவாளர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தி, உடனடியாக இதற்குப் பரிகாரம் காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் கவலை தரும் நிலை நம்முடைய மாநிலத்திலே இருக்கத்தான் செய்கிறது. இங்குள்ள 206 ஆலைகளில் நாம் உற்பத்தி செய்வது 10 லட்சம் பேல்கள். நம்முடைய தேவை 5½ லட்சம்தான். தேவையைவிட அதிகமாக 2 மடங்கு உற்பத்தி செய்கிறோம். ஆனால், ஆலை முதலாளிகளைக் கட்டுப்படுத்தி நூல் வழங்குகின்ற அதிகாரத்தை நம்மால் பெற முடியவில்லை. மத்திய அமைச்சரிடம் முதலமைச்சர் அவர்களே நீண்ட நேரம் எடுத்துச் சொன்னார்கள். இதுவரையிலும் மத்திய அரசு ஒப்புதல் தரவில்லை.